செ.வெ.எண்:48 நாள்:20.08.202

**பெரம்பலூர் மாவட்டம்**

**கவுள்பாளையம் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதிமாற்று வாரிய குடியியருப்பு பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்**

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் வீடற்ற ஏழை,எளிய மக்களுக்கு வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கவுள்பாளையம் ஊராட்சியில் நான்கு பகுதிகளுடன்கூடிய 504 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது. தற்போது 440 பயனாளிகள் வசித்து வருகின்றனர். இந்தக்குடியிருப்புகள் தரைத்தளத்துடன் கூடிய இரண்டடுக்கு மாடி குடியிருப்புகளாக கட்டப்பட்டுள்ளது. 09.06.2018 அன்று துவங்கப்பட்ட இக்கட்டடப்பணிகள் 31.01.2020 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தக்குடியிருப்புகளின் சில பகுதிகளில் பூச்சுகள் பெயர்ந்துள்ளதாகவும், வீடுகளுக்குள் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல் வரப்பெற்றதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், நேற்று (19.08.2021) தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் செயற்பொறியாளர் தலைமையிலான குழுவினர் உடனடியாக குடியிருப்பு பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

இன்று (20.08.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா,இ.ஆப., அவர்கள் கவுள்பாளையம் பகுதிக்கு நேரில் சென்று குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, குடியிருப்புவாசிகளிடம் கலந்துரையாடி குறைகளை கேட்டறிந்தார். பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட வீடுகளுக்குள் சென்று பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், வீடுகளின் பின்புறச்சுவர் மற்றும் வீடுகளுக்குள்ளும், படிக்கட்டுகளிலும் ஆங்காங்கே சிறிய அளிவில் சிமெண்ட்பூச்சுகள் பெயர்ந்துள்ளதை உடனடியாக சரிசெய்ய உத்தரவிட்டார்.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கவுள்பாளையம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு பகுதிகளில் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒரு சில குடியிருப்புகளில் ஆங்காங்கே சிறிய அளவில் சிமெண்ட் பூச்சுகள் பெயர்ந்துள்ளதையும், படிக்கட்டுகளில் பூச்சுகள் பெயர்ந்துள்ளதையும், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மற்றும் சுவற்றின் வெளிப்புறப்பூச்சுகளை உடனடியாக சரிசெய்ய உத்தரவிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. கட்டடத்தின் உறுதித்தன்மை குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும், குடியிருப்பு கட்டடங்கள் உறுதியாக இருப்பதாகவும் செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார். எனவே,

பொதுமக்கள் யாரும் இதுகுறித்து அச்சம் கொள்ளத்தேவையில்லை, குடியிருப்புவாசிகளின் கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றித்தரப்படும்.

குடியிருப்பு குறித்த புகார்களை எளிதில் தெரிவிக்கும் வகையில், இங்கேயே அலுவலகம் ஒன்றை அமைத்து, இங்கு குடியேறியுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் குறைகளை கேட்டறிந்து வீடுகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் உடனடியாக சரிசெய்திடும் வகையில் உதவிபொறியாளர் தலைமையிலான குழுவினரை பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. முதல் பிளாக் பகுதியில் உள்ள 8-ஆம் எண் வீட்டில் தற்காலிக அலுவலகம் அமைக்கப்படவுள்ளது.

குடியிருப்புவாசிகள் தங்கள் குறைகளை தெரிவிக்க ஏதுவாக ஒரு அலைபேசி எண்ணை தெரிவித்து, அந்த அலைபேசிக்கு வரும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று செயற்பொறியாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், குடியிருப்புவாசிகள் தங்கள் புகார்களை 97903-82387 என்ற எண்ணில் தொடர்புகொண்டு உதவிசெயற்பொறியாளரிடம் தெரிவிக்கலாம். குறைபாடுகள் உள்ளதாக கருதப்படும் அனைத்து வீடுகளும் முழுமையாக சரிசெய்து கொடுக்க வேண்டும் என்றும், குடியிருப்போர் அனைவரும் தங்கள் வீடுகளில் எந்த குறைகளும் இல்லை என்று தெரிவிக்கும் வகையில் வீடுகளை சரிசெய்திட தேவையான உரிய நடவடிக்கைகளை உடனடிகா மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. அவ்வப்போது இப்பகுதிக்கு நேரில் வந்து ஆய்வு செய்வேன் என்றும், பொதுமக்கள் எந்தஒரு குறைகளும் தெரிவிக்காத வகையில் பணியாற்ற வேண்டும் என்றும் அறிவுத்தப்பட்டுள்ளது. அனைத்து குறைகளும் முழுமையாக நிவர்த்தி செய்தபிறகே ஒப்பந்தகார்ருக்கான நிலுவைத்தொகை விடுவிக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய செயற்பொறியாளர் திரு.மா.அழகுபொன்னையா, உதவிசெயற்பொறியாளர் திரு.நவனீதக்கண்ணன், உதவிப்பொறியாளர் திருமதி.ஷகிலா பீவி, பெரம்பலூர் வட்டாட்சியர் திரு.சின்னதுரை, பெரம்பலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.செந்தில் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**